OS 166/2020

வா.சா.1 சடையாண்டி த/பெ கிருஷ்ணமூர்த்தி

நாள் 03.02.2026

**குறுக்கு விசாரணை**

1. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் எழுதுவதற்கு பத்திரம் யார் வாங்கியது என்றால் நான் தான் வாங்கினேன். கிரைய ஒப்பந்தம் எழுதுவதற்கு அதில் உள்ள விவரங்களை நான் தான் சொன்னேன் என்றால் இல்லை பத்திரம் எழுதுபவர் எழுதினார். பத்திர எழுத்தர் பெயர் பிச்சாண்டி ஆகும். வா.சா.ஆ.1 பிச்சாண்டி எழுதவில்லை என்றால் அவர் தான் எழுதினார். கிரைய ஒப்பந்தம் பதிவு செய்வதற்கு முன்பாக சொத்து சம்மந்தமாக மூல பத்திரம், பட்டா பார்த்து பதிவு செய்யப்பட்டதா என்றால் பிச்சாண்டி பார்த்து சொன்னார். மூலப்பத்திரத்தை சார் பதிவாளர் பார்த்தாரா என்றால் எனக்கு தெரியவில்லை. கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்ட பிறகு அந்த ஆவணத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து யார் வாங்கி கொடுத்தது என்றால் பிச்சாண்டி வாங்கி கொடுத்தார். வழக்கு சொத்தின் மூலப்பத்திரம் என்னிடம் தான் இருக்கிறது. அந்த மூலப்பத்திரத்தை இந்த வழக்கில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மூலப்பத்திரம் என்னிடம் வீட்டில் உள்ளது.

2. வழக்கு சொத்தின் மதிப்பு தெரியுமா என்றால் ஒரு செண்ட் ரூ.4,850/- ஆகும். மொத்த சொத்து 93 செண்ட் ஆகும். கிரைய ஒப்பந்தத்தில் மேலே சொன்ன செண்டிற்கான தொகை விவரம் போடப்பட்டுள்ளதா என்றால் தெரியவில்லை. முதலில் செண்ட் ரூ.4,850/- போடப்பட்டுள்ளது என்று சொன்ன ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. முதலில் போடப்பட்ட ஆவணத்தை தவிர இது 2வது ஆவணமா என்றால் எப்போது வேண்டு வேணாமலும் ரிஜிஸ்டர் செய்து கொடுக்கிறேன் என்று சொன்னார். ரூ.4லட்சம் கொடுத்ததற்கு வட்டி கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் இல்லை சொத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். வட்டி கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தால் அது தவறானதா என்றால் நான் வட்டி கேட்கவில்லை. பிரதிவாதிக்கு சொத்தை விற்பனை செய்ய எந்த காலத்திலும் எண்ணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

3. பிரதிவாதி என்னிடம் வட்டிக்காக தான் ரூ.4லட்சம் வாங்கினார் என்றால் சரியல்ல. வட்டிக்காக கொடுத்ததால் தான் பிரதிவாதியிடம் மட்டும் கையொப்பம் பெறப்பட்டது என்று சொன்னால் இல்லை. வழக்கை பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. என்னிடம் இருப்பதாக சொன்ன மூலப்பத்திரம் பிரதிவாதியின் தந்தை பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் என்றால் என்ன பத்திரம் என்று தெரியாது. ஆனால் என்னிடம் மூலப்பத்திரம் மட்டும் இருக்கிறது. மூலப்பத்திரத்தை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த முடியுமா என்றால் முடியாது. அடமானம் என்பதால் தான் மூலப்பத்திரத்தை நான் வாங்கி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.